# பாரதியும் மருதகாசியும்

**சௌ. சுருதி[1] மற்றும் அ. வளர்மதி[2]**

[1]பகுதி நேரமுனைவர் பட்ட ஆய்வாளர், அருள்மிகு மீனாட்சி அரசினர் மகளிர் கலைக்கல்லூரி, மதுரை – 2

[2]நெறியாளர், உதவிப்பேராசிரியர் , அருள்மிகு மீனாட்சி அரசினர் மகளிர் கலைக்கல்லூரி, மதுரை – 2

கலைமகளின் அருள் பெற்ற உன்னதக் கவிஞர் பாரதியார். தம்முடைய தேசத்துக்கு தேசிய உணர்ச்சியை உண்டு பண்ணும்நோக்கத்திற்காகவும்,பெண் கல்வி, பெண் விடுதலை, பொதுவுடமை கருத்துக்கள், தீண்டாமை, ஆன்மீகக் கருத்துக்கள் ஆகியவற்றை மக்களுக்கு எடுத்துரைக்கும் வகையில் கவிதைகளை வடித்துள்ளார். பாரதியாரின் கவிநயத்தை ஒரு கட்டுரையில் விளக்குதல் என்பது இயலாத ஒன்று. ஏனெனில், இயற்கையில் உள்ள அழகு, பசுமை, இனிமை என்று அனைத்தையும் ஒன்று திரட்டி பராசக்தியிடம் காணிநிலம் கேட்ட கவிஞன்.

மரபிலக்கியச் சாயல்களையும் தமிழ் மண்ணின் பெருமிதங்களையும் திரையிசைப்பாடல்களில் வெளிப்படுத்திய மகத்தான பாடலாசிரியர் 'திரைக்கவித் திலகம்' கவிஞர் மருதகாசி பாடல்கள். நாடகத்திற்குப் பாடல்கள் எழுதிக் கொண்டிருந்த அ.மருதகாசி தமிழ்த் திரையுலகில் இரண்டாம் தலைமுறை பாடல்கள் 1949ஆம் ஆண்டு எழுதவந்தார். திரையுலகிற்கு வந்த பிரபலமான பாடலாசிரியராக தனக்கெனத் தனி முத்திரையைப் பதித்து கொண்டவர். பாரதியார் மற்றும் அ.மருதகாசி இவ்விரு கவிஞர்களின் கவிதைகளின் கருத்துக்கள் ஒருமித்து பயணிக்கும் வரிகளை ஒப்பியல் முறையில் ஆய்வு செய்வதாக இக்கட்டுரை விரிவடைகிறது.

## தேசமும் நேசமும்

எமக்குத் தொழில் கவிதை இமைப்பொழுதும் சோராதிருத்தல், நாட்டுக்கு உழைத்தல் என்ற பாரதியின் சமூகப்பார்வை விசாலமானது. ஊருக்கு உழைத்தலை தனது சிந்தையில் கொண்டு நேர்த்தியாக உழைத்தவர். தேசத்தின் மீது அதிக காதல் கொண்டு தன் கவியை புனைந்த முண்டாசுக்கவியை போலவே தனது கவிதைகளில் விடுதலை பெற்ற பிறகு நமது தேசத்தைப் பற்றிய கனவுகளை வரிகளாய் வடித்தவர் கவிஞர் மருதகாசி அவர்கள்.

பாரதி தனது நாட்டின் மீது கொண்ட பற்றினால் இப்பார் அறியும் வகையில் கவி புனைந்துள்ளார்.

**“முப்பது கோடி முகமுடையாளுயிர்**
**மொய்ம்புறவொன்றுடையாள்- இவள்**
**செப்பு மொழிபதினெட்டுடையாள்எனிற்**
**சிந்தனை ஒன்றுடையாள்”**[1]

பல கோடி மக்கள் தொகையினை உடையவள். பல மொழிகளுக்கு பிறப்பிடமாக உடையவள். இருப்பினும், நமது தேசம் பாரத தேசம் என்ற ஒரே சிந்தனை கொண்டிருப்பவள் என்று கூறுகிறார். தாய் நாட்டின் சிறப்பை உணர்த்தும் விதமாக மற்றொரு கவிதையில்,

**“பாரத நாடு பழம்பெரும் நாடு**
**நீரதன்புதல்வர்இந்நினைவகற்றாதீர்....**
**என்றும் மன்னும் இமயமலை யெங்கள் மலையே**
**மாநிலம் மீதிஇதுபோல் பிரிதில்லையே“**[2]

என்று தாய்த்திரு நாட்டை நேசித்து கூறுகின்றார். பாரதியின் வழியில் கவிஞர் மருதகாசி தனது கவிதைகளில் வெளிப்படுத்தியுள்ளார்.

**“சண்டையின்றி யாவரும் ஒன்றுபட்டுவாழ்வோம்**
**அண்டை நாட்டு மக்கள்தம்மைஅன்பினாலேவெல்வோம்**
**நெஞ்சில் நேர்மை,ஈரம்,அஞ்சிடாதவீரம்**
**சொந்தங் கொண்டு வள்ளலாக வாழ வேணும் யாரும்**
**வாழ்க நமது நாடு”** [3]

வேற்றுமைகளின்றி ஒற்றுமையுடன் வாழவேண்டும். அன்பால் இந்த உலகத்தை வெற்றிக்கொள்ள முடியும் .நேர்மையாக எதற்கும் அஞ்சாத வீரத்தோடு நம் வாழ்வினை வாழ வேண்டும். இவ்விரு கவிஞர்களுக்கும் தேசம் எப்போதும் ஒற்றுமையாக இருப்பதன் வாயிலாக நல்லறங்கள் வளர்ந்தோங்கி உலக நாடுகளுக்கு முன்மாதிரியான நாடாகத் திகழும் என்ற கருத்தினைச் சிந்தையில் கொண்டு செயல்பட்டதை இவர்களின் கவிதைகள் வெளிப்படுத்துகின்றன. தேசப்பற்று போன்றே இக்கவிஞர்களின் மாநிலத்தின் கொண்ட பற்றும் சிறந்து விளங்குகின்றனர் என்பதை பறைசாற்றும் வரிகள் கீழே,

**"காவிரி தென்பெண்ணை பாலாறு - தமிழ்**
**கண்டதோர்வையைபொருனைநதி - யென**
**மேவியயாறுபலவோடத் - திரு**
**மேனி செழித்த தமிழ்நாடு"** [6]

ஆறுகள், வரலாற்றுச் சிறப்புகள் மற்றும் சான்றோர்கள் பலர் பிறந்த தமிழ்நாடு என்று தமிழ்நாட்டில் பெருமையினையும் அடுக்கிக் கொண்டே செல்கிறார் பாரதி.

**"கண்ணிலே கனிவிருக்ககருத்திலேதுணையிருக்க**
**எண்ணத்தால்உயர்ந்தவங்கசீமையிது- உலகில்**
**எந்நாளும் பொன் விளையும் பூமியிது"** [7]

வந்தாரை வாழவைக்கும் தமிழகம் என்ற கூற்றை தன் கவிதையின் மூலம் உரக்கச் சொன்னவர் கவிஞர் மருதகாசி அவர்கள் .மேலும்,

**"அநியாயம் செய்பவரை அஞ்சாமல் எதிர்த்து நின்று**
**தன்மானம் காத்துவரும்சீமையிது- பெற்ற**
**தாயாகும் பொன் விளையும் பூமியிது"** [8]

வாழ்விழந்து வருபவர்களை வாழச் செய்பவர்கள் மட்டுமல்ல நேர்மைக்குப் புறம்பாக வாழ்பவர்களை எதிர்த்துப் போராடும் குணம் உடையவர்கள் என்பதை இவ்வரிகளில் மூலம் விளக்குகிறார் கவிஞர்.

**பொதுவுடமை**

பொதுவுடமை என்பது உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற வேறுபாடு இல்லாமல் சமூகத்தில் அனைத்து தரப்பினருக்கும் ஒன்றாக இருப்பது. மனிதன் சேர்ந்து வாழும் போதுவிட்டுக் கொடுத்தல், உதவி செய்தல் ,பொறுத்துக் கொள்ளுதல், அன்பு செலுத்துதல், பிறரை மதித்து பிறர் துன்பம் கண்டு வருந்துதல், தனக்கும் தன்னைச் சார்ந்தவர்களுக்காக உழைத்தல் போன்ற பொதுவான குணங்களே சமுதாயத்தில் சேர்ந்து வாழ்வதற்கான அடிப்படையாய் அமைகிறது. இறைவன் படைப்பில் அனைத்து இயற்கை வளங்களும், விளைச்சலும் அனைவருக்கும் பொதுவானவை.ஆனால் ஒரு சிலர் சொத்துக்களை குவித்து இது எங்கள் உடைமை என்று கூறி உழைக்கும்மக்களைப்பசியாலும்பஞ்சத்தாலும் தவிக்க விட்டுவிட்டு தான் மட்டும் உண்டு மகிழ்கின்றனர். இந்நிலை கண்டு பாரதியார் தனது கவிதையில்

**"உழவுக்கும்தொழிலுக்கும் வந்தனை செய்வோம்**

**உண்டுகளித்களித்திருப்போரை நிந்தனை செய்வோம்"** [9]

என்று கூறியுள்ளார்.

சமுதாயத்தைச் சீர்குலைய செய்வது இல்லாமை, கல்லாமை, தீமை இம்மூன்றும் அடங்கும். இல்லாமை மிகக் கொடியது .எனவே, வயிற்றுக்குச் சோறிட வேண்டும் என்பதை பாரதியாரின் அடி பின்பற்றி கவிஞர் மருதகாசி அவர்களும்

**"வாயிருக்கும்எங்களுக்கும்வயிறிருக்கு**

**வாடுகின்றபசிப்பிணிதுயரிருக்கு**

**வாழ்வது உங்கையில்தானிருக்கு"** [10]

இந்த உலகில் பிறந்த எந்த ஒரு மனிதனும் பசியால் வருந்தக் கூடாது. அவ்வாறு பசியால் வருந்தக் கூடிய சூழல் இருக்குமேயானால், அதற்குக் காரணமான இந்த உலகத்தையே அழித்து விடுவோம் என்பதை,

**"இனி ஒரு விதி செய்வோம் - அதை**

**எந்தநாளும் காப்போம்**

**தனி ஒருவனுக்குஉணவில்லையெனில்**

**செகத்தினைஅழித்திடுவோம்"** [11]

எனப் பாடியுள்ளார்.

பசியின் கொடுமையை அனுபவித்து உயிர் துடித்துச் சாகின்ற மக்களைப் பார்த்தபோது ஏற்பட்ட வலியினை கவிஞர் மருதகாசி,

**"அந்தி வரையிலும் கஞ்சி கவலையே அறியா பெருங்கவலை**

**பொழுதானபின்னாலே தலையை சாய்க்கவேஇடங்கவலை**

**சந்துபொந்துகள் பாதையில் தூங்க சட்டம் இடந்தரவில்லை**

**சமத்துவம் என்பது வார்த்தையில் இருக்கும் வாழ்க்கையிலே இல்லை"** [12]

என்ற வரிகளின் வழி வெளிப்படுத்துகிறார்.

### கோடி வகை தொழில் செய்வோம்

எல்லோரும் ஒரு சுய தொழிலைக் கற்றுக் கொள்ள வேண்டும் .**'கைத்தொழில் ஒன்றை கற்றுக்கொள் கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்'** என்று நாமக்கல் கவிஞர் வெ இராமலிங்கம் அவர்கள் கூறியுள்ளார். பல தொழில்கள் செய்து நாம் நமது குடும்ப பொருளாதாரத்தை

உயர்த்துவதோடு நாட்டின் பொருளாதாரத்தையும் உயர்த்த வேண்டும் என்ற எண்ணம் கொண்ட கவிஞர்கள் கவியாக வடித்துள்ளனர்.

**"ஆயுதம் செய் வோம் நல்ல காகிதம் செய்வோம்**
**ஆலைகள் வைப்போம் கல்விச்சாலைகள் வைப்போம்**
**ஓதல் செய்யோம் தலை சாயுதல்செய்யோம்**
**குடைகள் செய்வோம்உழுபடைகள் செய்வோம்**
**கோணிகள்செய்வோம்இரும்பாணிகள்செய்வோம்"** [13]

இந்தியா அனைத்துப் பொருள்களையும் தயாரிக்க வேண்டும். அதன் மூலம் பொருளாதாரத்தில் தன்னிறைவு பெற்ற நாடாக மாற வேண்டும். உழவிலும், தொழிற்சாலை அமைத்து சிறப்பாகச் செயல்பட வேண்டும் .நம் நாடு தன்னிறைவான நாடாகும் வரை ஓய்வு இல்லை சோர்வும் இல்லை என்கிறார். அதனையே,

**"ஏர்முனைக்கு நேர் இங்கே எதுவுமே இல்லே**
**என்றும் நம்மவாழ்விலேபஞ்சமேஇல்லே!..."** [14]

என்கிறார்.

மனிதன் ஆரம்ப காலத்திலேயேஉழவும், கைத்தொழில்களும் கால வளர்ச்சிக்கு ஏற்ப மாற்றங்களையும்வளர்ச்சியும் பெற்று வருகின்றன என்பதை கவிஞர்கள் உணர்த்துகின்றனர்.

**நினைவு தொலைத்தவர்கள்**

அறம் பற்றிய செய்திகளை நமது இலக்கியம் அனைத்தும் போதிக்கின்றன. எண்ணம் தூய்மையாக அமைய முடியும் .எண்ணம் எழுவதற்கு இருப்பிடமாக உள்ள மனம் மாசு இல்லாததாக இருக்க வேண்டும். மனத்தின் மாசினைப் போக்குவதற்கு முயல்வதே அறமாகும். பொறாமை, பேராசை, வெகுளி, கடுஞ்சொல் ஆகியவை மன மாசுகளாகும். அவை இல்லாமல் இருப்பதே அறம் என்பதை வள்ளுவர்,

**"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்**
**ஆகுல நீர பிற "**

என்று கூறுகிறார். ஔவையும் அறத்தினை நன்கு கற்க வேண்டும் என்பதை **'அறம் செய்ய விரும்பு'** என்று தனது ஆத்திச்சூடியில் கூறியுள்ளார் .ஆனால், பாரதி பல கவிகள் அறம் சார்ந்து எழுதியவர். சமூகத்தின் மீது ஏற்பட்ட அதிருப்தியை வெளிப்படுத்தும் விதமாக,

**“கடமை புரிவார்இன்புறுவார்என்னும்**
**பண்டையக்கதைபேணோம்**
**கடமை யறிவோம் தொழிலறியோம், கட்டென்**
**பதனைவெட்டெனபோம்**
**மடமை, சிறுமை, துன்பம், பொய் ,வருத்தம் ,**
**நோவு மற்றிவை போல்**
**கடமை நினைவும்தொலைத்திங்குகளையும்**
**றென்றும்வாழ்குவமே”**[15]

என்று பாடியிருக்கிறார்.

இந்தக் கருத்துக்கள் நமது இலக்கியத்திற்கு முற்றிலும் புதிய கோணத்தில் தனது சொற்களைத் தொகுத்துள்ளார். இக்கருத்தைப் போன்று கவிஞர் மருதகாசியின்,

**“வெள்ளிப்பணத்துக்கும்**
**நல்ல குணத்துக்கும் வெகு தூரம் - இது**
**உள்ளபடி இந்த உலகம்**
**உணர்த்தும் ஒரு பாடம் “**[16]

என்று பாடியுள்ளார்.

**மூட நம்பிக்கைகள்**

நம் நாடு வல்லரசுபாதையினை நோக்கி நடைபோடும் இன்றைய காலச்சூழலிலும் மூடநம்பிக்கைகளுக்கு குறைவில்லை என்று கூறினால் அது மிகையாகாது. கற்றவரிடத்திலும் கல்லாதவரிடத்திலும் பரவலாக மூட நம்பிக்கைகள் காணப்படுகின்றன. இந்த நம்பிக்கைகள் ஆதிக் காலத்திலிருந்தே வந்திருப்பதை பாரதியார் மற்றும் மருதகாசி கவிஞர்களின் கவிதைகள் மூலம் அறியலாம்.

நம்மக்கள் ‘சூனியம், பேய், ஆவேசம் ,சாமியாடல் இவைகளை இன்றும் செய்து வருவது விந்தையாக இருக்கின்றது.

**“வஞ்சனைப்பேய்கள்என்பார் - இந்த**
**மரத்தில் என்பார் அந்தக் குளத்தில் என்பார்**
**துஞ்சுவதுமுகட்டில் என்பார் - மிகத்**
**துயரப்படுவார், எண்ணிப் பயப்படுவார்”** [17]

என்றும்,

**"மந்திரவாதி யென்பார் - சொன்ன**
**மாத்திரத்திலேமனக்கிலிபிடிப்பார்,**
**யந்திர சூனியங்கள் இன்னும்**
**எத்தனை ஆயிரம் இவர் துயர்கள்!"** [18]

கொடிய நோயால் பாதித்தவர்கள் முறையான மருத்துவ சிகிச்சை பெறாமல் வேண்டுதல்கள், தீர்த்தம் என்று தன்னுடைய உயிரை விடுகின்றனர் என்று தன்னுடைய கவிதைகளில் சாடியுள்ளார் பாரதியார். இதைப் போன்ற கவிஞர் மருதகாசி அவர்களும்,

**"சாமி சாமி என்று உரை ஏற்கின்ற – ஆசாமி ரொம்ப இந்த நாட்டிலே**
**ஆருக்குந் தெரியாமல் பஞ்சமா பாதகம் அஞ்சாமல் தினம் செய்து**
**நீதியை உபதேசம் செய்யும் உலுத்தப் பயலும் பயலும் ஒருசாமி**
**ஆருக்கும் குடியல்லோம் நமனைஎன்று ஆர்ப்பாட்டம் செய்து**
**நேருக்குநேர் வெறும் நிழலைக் கண்டு நடுங்கும் நீசப் பயலும் ஒரு சாமி"** [19]

என்ற வரிகளும் மூடநம்பிக்கையில் மக்கள் மூழ்கி தனது உடல், மனம், பணம், நேரம் அனைத்தையும் இழந்து விடுவதாகக் கூறுகின்றார் ஆசிரியர்.

**இறைமையும் ஆன்மீகமும்**

மனதில் தீய எண்ணங்கள் இல்லாமல் அடுத்தவருக்கு நல்லது செய்யாவிட்டாலும் கெடுதல் செய்யாமல் மனசாட்சிக்கு பயந்து வாழ்வது ஒருவகை ஆன்மீகம். உன்னைத் தவிர வேறு யாரும் தெரியாது: உன்னைத் தவிர வேறு யாரும் எனக்குக் கிடையாது: அனைத்தும் நீயாக இருக்கிறாய்! என்ற ஆன்மீக வாழ்வில் நமது சமய இலக்கியங்கள் நமக்கு பறைசாற்றுகின்றன.

**"அறிவானும் தானே அறிவிப்பான் தானே**
**அறிவாய் அறிகின்றான் தானே - அறிகின்ற**
**மெய்ப்பொருளும் தானே விரிசுடர்பார் ஆகாயம்**
**அப்பொருளும் தானே அவன்" (அற்புதத்திருவந்தாதி - 20)**

என்று நமது இலக்கியங்கள் நமக்கு உணர்த்துகின்றன. அவ்வழியில் பாரதியும் கவிஞர் மருதகாசியின் தனது கவிதையில் பதிவு செய்துள்ளார்கள்.

**"ஆதியாஞ் சிவனுமவன் சோதியான சத்தியுந்தான்**
**அங்கும்இங்கும் மெங்குமுள வாகும் - ஒன்றே**

**யாகினா லுலகனைத்தும் சாகும் - அவை**
**யன்றியோர் பொருளுமில்லை, அன்றியென்று மில்லையிதை"** [20]

பாரதியார் தன்னுடைய கவிதைகளில் மூடநம்பிக்கைகளை சாடுகின்றாரே தவிர இறைவன் மீது நம்பிக்கை கொண்டவராகவே வாழ்ந்துள்ளார் என்பதை அவரின் கவிதை வரிகள் தெளிவுபடுத்துகின்றன. பெண் தெய்வங்களின் மீது மிகுந்த பக்தி உடையவராக வெளிப்படுத்துகிறது அவரின் கவிதைகள்,

**"காளி மீது நெஞ்சம் - என்றும்**
**கலந்து நிற்க வேண்டும்**
**வேந்த ரேத்து புகழும் - பாரி**
**யாளி யொத்த வலியும் - என்றும்**
**இன்பம் நிற்கு மனமும்**
**வாழி யீதல் வேண்டும் - அன்னாய்!**
**வாழ்க நின்றன் அருளே"** [21]

இறைவன் மீது கொண்டிருக்கும் சிந்தனை இரண்டற கலந்து வணங்க வேண்டும். தன் கவிதையில் வரங்கள் பல கேட்டு தனது கற்பனை சிறகுகளை விரிக்கின்றார். அவரின் கவிதைகளை வாசிக்கும் வாசகர்களின் கற்பனை உலகத்திற்கு திறவுகோலாக உள்ளார்.பாரதியார்

**"பூமாலை வாடி இதழ் உதிருமென எண்ணியே**
**பாமாலை பைந்தமிழில் சூடிதின முன்னையே**
**அன்பால் வணங்கிடும் என்பால் உனதருள்**
**குன்றாத நெஞ்சோடு நன்றாய் வாழஎனை கண்பாரும்"** [22]

என்ற பாடல் வரிகள் மூலம் கவிஞர் மருதகாசி சிவன் மீது கொண்ட பக்தியின் அளவினை கூறுகிறார்.

**தொகுப்புரை**

பாரதியார், மருதகாசியின் கவிதைத் திறத்தால் பல தேசியப் பாடல்களை நாட்டு மக்களின் செவிக்கும் சிந்தைக்கும் கொண்டு வந்துள்ளனர். நாட்டு மக்களின் மனநிலையும், நாட்டின் நிலைமையும் கண்டு மனம் நொந்து வேதனைப்படுகின்றனர் என்பதை அறிய இயலுகிறது. சமூகச் சீர்திருத்த சிந்தனைகளை வலியுறுத்தும் கவிதைகளும் சமூகத்தை சாடும்

கவிதை வரிகளும் மக்களிடையே அறியாமையை அகற்றி ஒளியேற்றும் சிந்தனைகளை விதைக்கின்றன. அனைவரும் ஒன்றாகக் கூடிதொழிலைச் செய்ய வேண்டும் கைத் தொழிலை கற்றுக் கொள்வதால் நாடு முன்னேற்றத்தை நோக்கி நகரும். நியாயத்திற்கு மாறாக நடப்பது கொடுமை என்பதை இவ்விருகவிஞர்களும் தனது கவிதைகளின் வழியாக நமக்கு விளக்குகின்றனர்.

**பார்வை நூல்கள்**


1. பாரதியார் - பாரதியார் கவிதைகள் - மணிவாசகர் நூலகம்.
2. பொன். செல்லமுத்து (தொகுப்பாசிரியர்) – மருதகாசி திரையிசைப் பாடல்கள் - தொகுதி – 1 - மணிவாசகர் நூலகம்.
3. திருவள்ளுவர் - திருக்குறள் - நேஷ்னல் பப்ளிஷஸ்.
4. காரைக்காலம்மையார் - அற்பதத் திருவந்தாதி – அமுத நிலையம்.